**மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு - 2014**

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1999 இன் 50 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி (திருத்த அதிகாரச்சட்டத்தின்) 10(ஈ)(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின்

காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் 2014 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் சமர்ப்பிக்கப்பட்ட பௌதீக மெய்மையாய்வு அறிக்கையின்படி எஞ்சியிருந்த ரூபா 980,186 பெறுமதியான காகிதாதிகள்

இருப்பு, திறன் சான்றிதழ் மற்றும் தேசிய திறன் சித்தி இறுவட்டுக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களை நாளதுவரையாக்குதல் தொடர்பான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவோ அல்லது அது தொடர்பாக பொறுப்பு ஏற்படுத்தாதிருந்த போது ரூபா 493,000 செலுத்த வேண்டிய செலவினமாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) கணிப்பீட்டு வழுவின் காரணமாக 07 ஊழியர்களுக்கு பணிக்கொடை ஒதுக்கீடு ரூபா 153,187 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டிற்காக செய்யப்பட்ட சீராக்கல்கள் ரூபா 180,305 காலரீதியாக சீராக்குவதற்குப் பதிலாக மொழிபெயர்ப்பு ஒதுக்கத்தில் (Translation Reserve) சீராக்கப்பட்டிருந்தது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் பிரிவு | சேவையை விட்டுச் சென்ற மற்றும் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட 03 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 176,983 தொகை பிணையாளரிடமிருந்து அறவிடுவதற்கோ அல்லது ஏனைய நடவடிக்கைகளோ எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2003 யூன் 2 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 ஆம் பிரிவு | பதில் கடமை நியமனம் 03 மாதங்களுக்கு மேற்பட்ட காலங்களுக்கு நியமிக்க முடியாதிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை |

எடுக்கப்படாத இரண்டு சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான ஆணைக்குழுவின் நிதி விளைவுகள் ரூபா 4,367,161 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 3,229,145 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 7,596,306 அதிகரிப்பினைக் காட்டியது. அரசாங்கத்தினதும் செயற்திட்டத்தினதும் மானியங்கள் அதிகரித்தமையும் ஆண்டின் செயற்பாட்டு வருமானம் அதிகரித்தமையும் பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் (Annual Implementation Plan) இலக்கிடப்பட்ட பின்வரும் பணிகளை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

(அ) பல்வேறு நிறுவனங்களிடமிருந்து சமர்ப்பிக்கப்பட்ட 16 ஆராய்ச்சித் திட்டங்களில் 9 இற்காக ரூபா 958,000 தொகை செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அதில் 8 ஆராய்ச்சிகளுக்காக ரூபா 346,000 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் ஒரு ஆராய்ச்சி கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) பாடநெறி தராதரப்படுத்தல் மற்றும் பயிற்சியளித்தல் பிரிவு

(i) பாடநெறிகளை தராதரப்படுத்தலுக்கான அரசாங்க பிரிவில் 616 பாடநெறிகளும் தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் 104 பாடநெறிகளும் மதிப்பீட்டிற்கு உள்ளாக்கப்பட்டிருந்த போதிலும் முறையே 451 பாடநெறிகள் மற்றும் 70 பாடநெறிகள் மாத்திரம் தராதரப்படுத்தப்பட்டிருந்தன.

(ii) தராதரப்படுத்தல்களை புதுப்பிப்பதற்காக அரசாங்கப் பிரிவு தனியார் பிரிவு மற்றும் அரசார்பற்ற அமைப்புக்களிலிருந்து கிடைத்த 247 விண்ணப்பங்களில் இருந்து 211 பாடநெறிகள் மாத்திரமே மதிப்பீட்டிற்கு உள்ளடக்கப்பட்டிருந்தன.

(இ) தேசிய தொழில் தகைமைப் பிரிவு

(i) தேசிய தொழில் தகைமை பிரிவை பிரசித்தப்படுத்தல் மற்றும் அறிமுகப்படுத்துவதற்காக முழுமையான பங்களிப்பினை மதிப்பிடும் ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 1.29 மில்லியன் செலவிடுவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் 2.16 மில்லியன் அதற்காக செலவிடப்பட்டிருந்தது. அது எதிர்பார்க்கப்பட்ட செலவினத்தை விட 67 சதவீதத்தினால் அதிகமானதாகும்.

(ii) ஆணைக்குழு நிறுவனங்களில் 16 திறன் மதிப்பீட்டு கணக்காய்வை மேற்கொள்வதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் ஒரு கணக்காய்வு மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் சனவரி முதல் யூன் வரை ஊழிய சந்தைத் தகவல் கூற்று வெளியிடப்பட்டிருக்கவில்லை.

(உ) மனிதவள அபிவிருத்திற்காக 25 உள்நாட்டு ஊழியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் 15 வெளிநாட்டு ஊழியர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும் நடாத்துவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் 15 மற்றும் 10 நிகழ்ச்சித்திட்டங்களே நடாத்தப்பட்டிருந்தன.

## 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

(அ) நிதி உதவி கையளித்தல் செலவினம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் போது பாடநெறிக்கான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு நிதி உதவியாக ரூபா 4,337,159 தொகை அரசாங்கத் துறைக்கும், தனியார் நிறுவனங்களுக்கும் மற்றும் நிர்க்கதியானவர்களுக்கும் வழங்கப்பட்டிருந்தன. நிதி உதவி வழங்கும் போது ஆணைக்குழுவிற்கும் நிதி உதவி அளிப்பவர்களுக்குமிடையே ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் படி தேசிய தொழிற்தகைமை (NVQ) சான்றிதழ் ஒன்றை

விநியோகிப்பதற்கு உரிய பாடநெறி தரப்படுத்தப்படாத 10 நிறுவனங்கள் காணப்பட்டன.

(ii) 2012 ஆம் ஆண்டின் போது 11 அரசாங்க நிறுவனங்களுக்கான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 3,446,652 தொகையான நிதி உதவி வழங்கப்பட்டிருந்தன. அந்த நிறுவனம் 2015 மே 29 ஆந் திகதி வரையிலும் அப்பாடநெறியை தரப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டச் செலவினம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கைத்தொழில் மற்றும் தொழிற்கல்வி பயிற்சி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பேஸ்லைன் மெய்மையாய்விற்காக (Baseline Survey) 90 நாட்களில் பூர்த்தி செய்யும் அடிப்படையில் ரூபா 5,948,450 தொகையான ஒப்பத்திற்கு 2014 யூன் 26 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2,081,958 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2015 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் அது பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) 04 வேலைகளுக்கான தேவை மற்றும் வழங்கல் தொடர்பாகக் காணப்பட்ட இடைவெளி தொடர்பான மெய்மையாய்வு (Survey on Industries Demand Gap) 90 நாட்கள் பூர்த்தி செய்யும் அடிப்படையில் 2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதி ரூபா 3,485,000 தொகையான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அந்த ஒப்பந்தத்திற்காக ரூபா 1,219,750 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2015 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. சாத்திய வள ஆய்வு மேற்கொள்ளப்படாது ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட காரணத்தினால் பூர்த்தி செய்வதற்கு 149 நாட்கள் தாமதமாகியமை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தொழிற்கல்வி பயிற்சித் திட்டம் திருத்தப்பட்டு நாளதுவரையாக்குதல் 2014 ஒக்டோபர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு திசெம்பர் மாதத்தின் போது பூர்த்தி செய்ய வேண்டி இருந்த போதிலும் அவ்வாறு மேற் கொள்ளப்படாதிருந்ததுடன் திட்டத்தை தயாரிப்பதற்கு நிறுவனமொன்றைத்

---

தெரிவுசெய்வதற்கு 107,100 செலவிடப்பட்டு செய்திப்பத்திரிகையில் அறிவுறுத்தல் பிரசுரிக்கப்பட்ட போதிலும் நிறுவனம் தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை. இதனால் செலவினம் மற்றும் ஒதுக்கப்பட்ட ரூபா 600,000 தொகை விளைவற்றுக் காணப்பட்டது.

(ஈ) 2012 ஆம் ஆண்டின் நிலையான சொத்துக்களில் மெய்மையாய்வின் போது பாவனைக்கு எடுக்க முடியாததாக இனங்காணப்பட்ட ரூபா 976,975 தொகையான 49 பொருள் விடயங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிலையான சொத்துப் பதிவேட்டிலிருந்து அகற்றுவதற்கு அல்லது திருத்தியமைத்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பயிற்சித் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு 2013 ஆம் ஆண்டில் ரூபா 190,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கையின் படி 2014 மே 05 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2015 மே மாதம் வரையிலும் அச் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 பதவியணியினர் நிர்வாகம்

(அ) மீளாய்வாண்டின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 102 ஆகவும் உள்ளபடியான எண்ணிக்கை 77 ஆகவும் இருந்ததுடன் வெற்றிடங்களான பதவிகளின் எண்ணிக்கை 25 ஆக இருந்தது. இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 மார்ச் 01 ஆந் திகதி முதல் 2015 சனவரி வரை இரண்டாம் நிலை அடிப்படையில் பணிப்பாளர் நாயகம் பதவிற்கு ஒரு உத்தியோகத்தர் சேர்க்கப்பட்டு ரூபா 2,772,806 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் உள்ளபடியான பதவிக்கு உரித்தான சம்பளத்தை விட இரண்டு மடங்கு சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. பணிப்பாளர் நாயகம் பதவிக்காக நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை சேர்ப்பதற்கு 2015 ஏப்ரல் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் பிரதி பணிப்பாளர் நாயகமும் இரண்டாம் நிலை அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

### 4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.5 (அ) பிரிவின் படி “சீ” தரத்தில் கூட்டுத்தாபனத்தில் உத்தியோகபூர்வ வாகனங்களை ஒதுக்கக்கூடிய தலைவர், பிரதான நிறைவேற்று

உத்தியோகத்தர் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளர்களுக்காக மாத்திரமாக இருந்த போதிலும் அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக ''சீ'' தரத்தின் கீழ் கொண்டுவரப்படுகின்ற ஆணைக்குழுவின் பிரதிப் பணிப்பாளருக்கும் 5 பணிப்பாளர்களுக்கும் ஒதுக்கப்பட்ட வாகனங்களை வழங்கி அதற்காக மீளாய்வாண்டில் ரூபா 1,632,960 தொகையான எரிபொருள் படி செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டில் மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கும் செலவினத்திற்கும் மற்றும் உள்ளபடியான வருமானத்திற்கும் செலவினத்திற்குமிடையே கருத்தில் கொள்ளக்கூடிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது ஆணைக்குழுவின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளின் மீது விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) ஊழியர் முகாமைத்துவம்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு